உ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ருக்மாங்கதசரித்திர
கும்மிப்பாட்டு

இஃது

பத்மாஸனி அம்மாளால்

இபற்றப் பட்டதை

K. வயிரவ பிள்ளை அவர்களால்

மதுரை

அஷ்டலெக்ஷிமி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப் பட்டது

ரிஜிஸ்டர் காப்பி ரைட்)

1928 [அணா 8

உ

ஸ்ரீ ராமஜெயம்.

ருக்மாங்கத சரித்திரம்.

கும்மிப்பாட்டு.

விருத்தம்.

புவிதனையாண்டிடும் ருக்மாங்கதனெனும் புனிதனும்விரதம்புரிந்து
அவனியெங்குப்பரவி ஏகாதேசியெனும் அனுஷ்டித்துவந்தகதைதனை
வியாசவுரைத்த இவ்வுலகினிலுள்ள கன்னியர்கள் பாடும்கும்மியாகவே
[னும்கூற
சவிகூர்ந்து பெரியோர்கள் சிறியதோர் வெண்பாவை செப்பிடும்கல்
[வியை செப்புவீரகனே

ருக்மாங்கத சரித்திரம்.

(கும்மிப்பாட்டு மெட்டு)

1 சாரங்கராஜாவுன்பாதமலர்தன்னை
சரணமென்று அடியாள் பணிந்தேன்
பாரெங்கும்புகழும் ருக்மாங்கதசரித்ரந்தன்னை
பாடவென்று கிருபைதாருமென்றேன்

2 தாரணியோர்கள் புகழ்ந்தேற்றும்
தாமோதரன்பாதம் நான்பணிந்தேன்
பூர்ணமாகநிறைவேற்றுமிந்த
புண்யசரித்ரமுரைத்திடவே

3 ஏகாதேசியின் மகிமைதன்னை
எந்தன்மனதில் உரைத்திடவே
கோகுலந்தன்னில்வளர்ந்தவரேகிருஷ்ணா
கோவிந்தாஉன்பாதம் யான்பணிந்தேன்

4 அண்டமுழுவதும்உண்டவரேசாமி
ஆலிலைமேல்பள்ளிகொண்டவரே
தொண்டர்களைக்காத்து நின்றவரேகிருஷ்ணா
துவாரகாபுரிதன்னில் வாழும்ஹரே

5 பெண்மதியாலே உரைத்ததொரு
பிழைகள் ஏதாகிலும் வந்தாலும்
கண்ணா உந்தன்மனது சகித்தென்னை
காத்தருள் செய்திட வேணுமையா

6 அகில ஜெகத்துக்கு ரக்ஷகியே
அனைவர்க்கும் நாவி லுசந்தவளே
சகலவித்தைக்குமதிபதியே தாயே
சரஸ்வதிஎன்னுவில் வந்தருள்வாய்

2-வது கட்டம்.

(மூளைப்பாட்டு மெட்டு)

1 பட்டணமாம் பட்டணமாம் பீமபுரபட்டணமாம்
பட்டணத்தையாளுகின்ற ருக்மாங்கெதராஜாவர்

2 அஷ்டதிக்கும்புகழ்ந்தவராம் அச்சுதரைபணிவாராம்
இஷ்டமுடனெகாதேசி விருதம்தன்னைசெய்பவராம்

3 பக்தியில்மிகுந்தவராம் பகவத்தன்மையானவராம்
முக்திமிகபெற்றவராம் மூர்த்திபாதம்பணிபவராம்

4 உத்தமபுருஷருக்கு பத்தினிசந்தியாவளியாம்
மெத்தவுப்பதிவிரதையாம் உத்தமசிரோன்மணியாம்

5 உத்தமியாள்பெற்றெடுத்த புத்திரன்தர்மாங்கதனும்
பக்தியுடன்பகவானை பாதபூஜைசெய்பவனும்

6 அன்னதானம்சொர்ணதானம் அநேகம்பசுதானம்
இன்னும்பலதானம்செய்து இன்பமுடன்தான்வசித்தார்

7 சித்தம்பூரித்துமவர் சக்தியுள்ளநகரந்தன்னில்
பக்திநீதிதர்மத்தினால் மெத்தஅரசாண்டிருந்தார்

3-வது கட்டம்.

(வைதீகன் பாட்டு மெட்டு)

1 மங்களமாய்பீமபுரம் தன்னிலந்தராஜன்
கங்கைதனில்ஸ்நானஞ்செய்து சிங்காரமதாக

2 அநுஷ்டானஜெபதபங்கள் அரசனுமுடித்து
கனிவாகதர்மாங்கத ராஜனுடன்கூடி

3 ஆபரணம்துலங்கநல்ல ஆடைகள்விளங்க
விவேகருடநெற்றிதன்னில் கஸ்தூரியிலங்க

4 உன்னிதமனைதன்னிலே ருக்மாங்கதராஜன்
அன்னம்புஜித்துவெகு ஆனந்தமதாக

5 சொர்ணமயமாயிருக்கும் அரண்மனைதனிலே
வர்ணசிம்மாசனந்தனிலே வந்துஇளைப்பாறி

6 மந்திரிமாருடனேமகா ராஜன்கொலுவிருந்தார்
அந்தசமயந்தனிலே வசிஷ்டர்முனிவந்தார்

4-வது கட்டம்.

(பள்ளு ராகம்)

1 வந்தார் வசிஷ்டமுனி பீமபுரபட்டணத்தில்
அந்தருக்மாங்கதராஜரண்டை தனிலே

2 வசிஷ்டரைக்கண்டவுடன் எழுந்திருந்து அரசன்
வணங்கிநமஸ்கரித்து எதிரே நின்றார்

3 நவரத்னசிம்மாசனத்தில் உட்காரச்செய்துராஜன்
நானாவித க ஸ்தோத்திரம்செய்தார்

4 பட்டணத்திலிதுவரையும் அரசாண்டேன்நான்
பகவானையொருநாளும் பூஜிக்கவில்லை

5 எந்தவிதம் பகவானை பூஜைசெய்யலாமிப்போ
எந்தனுக்கருளுமென்று முனிவரிடத்தில்

6 இந்தவிதமாகவே ராஜன்கேட்டுநிற்க
சந்தோஷத்துடனேமுனி நாதருரைப்பார்

7 நந்தவனச்சோலை தன்னை உண்டு செய்துநீ
நானாவிதபுஷ்ப ஜாதியைவைத்து

8 பக்தியுடன் புஷ்பங்களை எடுத்துக்கொண்டுவந்து
நித்யம் அர்ச்சனைகள் செய்யுமென்றார்.

5-வது கட்டம்.

(ராஜனும் பதறியங்கே என்ற மெட்டு)

1 முனிவருடைய வார்த்தையை அணுவளவும் தவறாமல்
மனமகிழ்ந்து அரசனும் மந்திரிமாரிடம்

2 அந்தக்ஷணமே மந்திரிமார் அரசன்மகிழ்ந்து உரைத்ததை
சொந்தவேலைக்காரர்களிடம் சொல்லியே அவாள் ஏவினர்

3 சொன்னவுடனே சேவகர் சோலைவனத்தைச்செய்ததில்
உன்னிதமானபுஷ்பங்கள்உயர்ந்தவகைகள்கொண்டுவந்தார்

4 மல்லிகைமுல்லைரோஜாவும் மனோரஞ்சிதம்செண்பகம்
சொல்லிமுடியாத புஷ்பவகை இன்னும் பலகோடி ஜாதியாம்

5 நந்தவனச் சோலைதன்னில் அந்தமாய்க்குளம்வெட்டி
மந்தாரைமுல்லை பிச்சி அரும்புசெந்தாமரைகள் விளங்கவே

6 சோலைவனத்தில் துளசிவைத்து நாலுபுறமும் காவலிட்டு
சீலனக்குநந்தவனமும் சிங்காரமாகத்துலங்கவே.

6-வது கட்டம்.

1 அந்தமுடனேஸ்நானஞ்செய்து
ஆடைகள்தரித்து ராஜன் ஆடைகள்தரித்து
சந்தோஷத்துடனே ராஜன் சிந்தையில்மகிழ்ந்து

2 நித்தியானுஷ்டானம்செய்து
நிஷ்டைகள் முடித்து ராஜன் நிஷ்டைகள் முடித்து
பக்தியுடனே சோலையில்வந்து புஷ்பங்கள்தன்னை

3 சொர்ணத்தாலிசைந்ததொரு
குடலைதன்னிலே ராஜன் குடலைதன்னிலே
வர்ணவர்ணமானமலர்கள் எடுத்துக்கொண்டுவந்தார்

4 புகழ்ந்துராஜன் புத்மனுடனே
மகிழ்ந்துமெத்தவே ராஜன் மகிழ்ந்துமெத்தவே
உகந்திருக்கும் பகவானுக்கு அர்ச்சனைசெய்தார்

5 யானைக்கு வந்திடர்தீர்த்த
ஆதிமூலவரை ராஜன் ஆதிமூலவரை
தீனரக்ஷகா என்று சொல்லி தினமும் பூஜித்தார்

6. ஒருதினத்தில் உகந்துராஜன்
மலர்களையெடுத்து ராஜன் மலர்களையெடுத்து
அரண்மனைக்கு வந்தார் அந்த தருணந்தன்னிலே

7-வது கட்டம்

1 அன்புடனே நாரதமுனி தம்பூருசகிதமாகவே
இன்பமாக ராஜரிடத்தில் எழுந்தருளினாகினுர்

2 நாரதரைக்கண்டவுடனே நமஸ்கரித்து ராஜனும்
பூரணமாக எடுத்து வந்த புஷ்பங்களைக்காத்தினுல்

3 இன்று இவரைத்தெய்வமென்று இன்பமாகராஜனும்
கொண்டுவந்த புஷ்பங்கள்தனை குடலையுடனே பூஜித்தார்

4 பூஜைசெய்துராஜன்நிற்க முனிவருக்கெதிராகவே
வாசனையானமலர்களைக்கண்ட நாரதமுனிமகிழவே

5 இந்தவிசித்திரமானமலரை இதுவரையிலுங் கண்டதுண்
[டோ
இந்திரலோகத்தில்கூட இருக்குமோ இந்தவிசித்ரங்கள்

6 இந்திரனிடத்தில்இதைக்கொண்டுபோய் அறிவிப்போ
(மென்றுமுனிவரும்
அந்த விசித்ரமானமலரை முந்திதன்னில்முடியவே

7 ராஜனிடத்தில்விடைகள்பெற்று நாரதமுனிநடக்கவே
வாசனையானமலர்களைக்கொண்டு வானுலுகத்திலுதிக்கவே

8-வ்து கட்டம்

இராகம் [அஸ்தகிரிநாதனுக்கு என்ற மெட்டு]

பல்லவி

1 இன்பமாய்வந்த முனியை இந்திரனெழுந்துபணிய

அநுபல்லவி

அன்புடன் அரும்புமலர்தன்னைக்கொண்டு முன்னேசென்று
(இன்ப)

2 தீனரக்ஷகர்குகந்த திவ்யமலர்கள்தன்னை
வானுலகம்தன்னிலரசாளும் தேவராஜன்கண்டு [இன்ப]

3 அஷ்டதிக்கும்வாசித்திடும் அரும்புமலர்கள்தன்னை
இஷ்டமுடன்நாரதரும் இந்திரனிடம்தனிக்கொடுக்க [இ]

4 கொடுத்தமலர்தன்னையிரு கரங்களினால்வாங்கியதை
எடுத்தொருவசனமுனி நாதாஎன்றுஇந்திரன் சொல்வான்

5 இந்தவிசித்ரமலர்கள் எங்கிருந்ததோமுனியே
எந்தனுக்கருள்செய்திட வேணுமென்றுமிகவணங்கி [இ]

9-வது கட்டம்.

1 சொல்வார்நாரதர்மகிழ்ந்து இந்திரனிடம்
சொல்வார் நாரதர் மகிழ்ந்து.

2 செல்வமொங்கிவிளங்கும் ஸ்ரீஹறிபாதம்தன்னை
சிந்தைமகிழ்ந்து பூஜிக்கும் ருக்மாங்கதனை சொல்

3 பூமியில் ருக்மாங்கதன் பூஞ்சோலைதன்னைவைத்து
பூஜைசெய்குறானென்று அவ்வரசனை சொல்

4 சியாமளவர்ணகோதண்ட ஸ்ரீஹறியான
சாரங்கனைப்பணியும் ராஜன்மகிமை சொல்

5 அஞ்சலிசித்ராமலர் உந்தனுக்குவேண்டுமானால்
அதனையெடுத்துவந்து பூஜிப்பாயென்று சொல்.

6 திருடியமலர்களைதினமும் எடுத்துவந்து
ஹறிபூஜைசெய்வாளோ என்று இந்திரன் வினவ சொல்

10-வது கட்டம்.

[நந்தி ஓநந்தி என்ற மெட்டு]

1 நாரணனைபூஜைசெய்வதில் களவுண்டோ இந்திரா
ராஜேந்திரா
நானொருவசனத்தை உரைசெய்வேனிதைக்கேள் இந்திரா
தேவேந்திரா

2 பாருலகம்தன்னில் பிரமச்சாரி இந்திரா ராஜேந்திரா
பிராமணனொருவன் தாசிவைத்திருந்தான் இந்திரா
தேவேந்திரா

3 ராஜாதிராஜர்கள்பூஜைசெய்வதற்காக இந்திராராஜேந்திரா
வைத்தசோலையில் மலரெடுத்து தாசிக்கே கொடுப்பான்
இந்திரா தேவேந்திரா

4 தினந்தோறும்மலர்களைத்திருடிஎடுக்கும்போது இந்திரா ராஜேந்திரா
ஒருதிவ்யமலரும் கிணற்றோரத்திலிருந்தது இந்திரா தேவேந்திரா

5 காத்துக்குளட்டாமலே தாட்டியாலிழுத்தான் இந்திரா ராஜேந்திரா
அதுதனக்குவராமலே கிணற்றில்விழுந்ததே இந்திரா தேவேந்திரா

6 கிணற்றில்விழுந்ததென்று மனதில்வருத்தமுற்று இந்திரா ராஜேந்திரா
அதைக்கிருஷ்ண அர்பிதம்என்று கிலேசத்தடனுரைத்தான் இந்திரா தேவேந்திரா

7 கிருஷ்ணஅர்ப்பிதம்என்று சொன்னதோர்வார்த்தைக்கு இந்திரா ராஜேந்திரா
கிடைத்தசௌபாக்கியத்தை என்னென்றுநானுரைப்பேன் இந்திரா தேவேந்திரா

8 வைகுண்டநகரில்வாழும் ஸ்ரீஹரியை இந்திரா ராஜேந்திரா
பொருவைபவமாகவே கைகூப்பிநமஸ்கரித்தான் இந்திரா தேவேந்திரா

11-வது கட்டம்.

1 இந்தவிதமாகவே அந்தநாரதருரைத்து
இந்திரனிடத்தில் விடைகள் பெற்று இருப்பிடம் சென்று

2 சந்தோஷத்துடன் கூடவே யந்த இந்திரன் மகிழ்ந்து
சொந்தமான சப்தகன்னிமார்களை அழைத்தான்

3 அன்புடனேதேவதாஸ்திரீகள் வந்துவணங்க
இன்பமாக அவர்களிடம் இந்திரனுரைப்பான்

4 தாரணியில் ருக்மாங்கதருட சோலையில் சென்று
நாரணற்கிசைந்தமலர் எடுத்துவாருங்களென்றான்

5 சொன்னவுடனே கன்னிமார்கள் மிகமனமகிழ்ந்து
சொர்ணக்காந்தியான விமானந்தன்னிலேறியே

6 வேகமாய்ருக்மாங்கதருட சோலையில்சென்று
அனேகவிதமானமலர் எடுத்துக்கொண்டுவந்தாள்

7 வானுலகைத்தனையாளும் இந்திரன்வாங்கியே மகிழ்ந்து
தீனரக்ஷகரான ஹரியை தினமும் பூஜித்தான்

12-வது கட்டம்

(யாரென்று கேட்டதொரு மைந்தனைப்பார்த்து என்ற மெட்டு)

1 புவனிதன்னையாளும் ருக்மாங்கதராஜாநல்ல
பூமலரெடுப்பதற்கு சோலையில்வந்தார்

2 நவரெஜிதமான அந்தவனம்தன்னிலே
நல்மலரைக்காணாமலே பிரமித்து நின்றார்

3 திரும்பியுஞ்சோலைவனத்தைச் சுற்றிப்பார்த்தாரந்த
திவ்யமலரைக்காணாமல் திகைத்துநின்றார்

4 மறுநாள் காலைதினத்தில் வந்துபார்த்தாரந்த
மறுமலரைக்காணோமென்று பிரமித்து நின்றார்

5 ஓய்ந்துவிட்டதோஎன்று நினைத்துக்கொண்டு ராஜன்
ஒருவருஷகாலமாக இருந்துவிட்டார்

6 சாயந்திரவேளைதன்னில் வந்துபார்த்தாரந்த
ஜாதிபுஷ்பரும்புகள் இருப்பதைக்கண்டார்

7 சூர்யஉதயந்தன்னிலே வந்துபார்ப்பாரந்த
ஜோதிமலரைக்காணாமல் வாடுவாரே

8 ஆரோதிருடர்கள் எடுத்துப்போமாரிதை
அறியவேணுமென்றுசொல்லித்தேடுவாரே

9 ஆவலுடன் சோலைதன்னில் வந்துபார்த்தாரந்த
அரும்புமலரைக்காணமல் போஜனைசெய்தார்

10 காவலர்களண்டைதன்னில் ஓடிபேவந்துராஜன்
கடுங்கோபத்துடனே உரைசெய்வார்

11 எண்டாபயல்களா காவலர்களா
இதிலிருக்கும் மலர்களெல்லாம் எங்கடாவென்றூர்

12 ஆண்டவாயெங்கள் துரையே மகாராஜாநாங்கள்
அறியோம் அறியோமென்று அவர்கள் சொன்னூர்

13-வதுகட்டம்

(தேடித்திரிந்தேனே சகிமாரே என்ற மெட்டு)

1 எந்தனுடையநந்தவனந்தன்னிலே
வந்துமலரெடுப்பதாரடா

2 அந்தமுடையநல்ல மந்தாரைமலர்களை
சொந்தமாகவந்தெடுப்பானேடா

3 தோட்டத்தின்கதவுகள் பூட்டாமலேஎல்லோரும்
வீட்டில்படுத்துறங்கிருந்தீர்களோ

4 ஹறிமாதவர்க்குகந்த அரும்புமலரையெல்லாம்
அறியோம் அறியோமென்றுரைத்தீர்களே

5 கண்டுதிருடர்களை கொண்டுவாராமற்போனல்
செண்டாக்கினைசெய்வேன் என்றுரைத்தாரே

6 கண்ணிற்பொறிபறக்க காவலர்களைப்பார்த்து
உன்னிதமாகவே உரைத்தாரே

14-வது கட்டம்

(கொட்டமிடும் ஹனுமாரே என்றமெட்டு)

1 கோபத்துடனே ராஜனுரைக்கக் காவலாளிகள்
கொந்தளப்பொன்னான சோலையைவந்து காத்தார்கள்.

2 தேவகன்னிகள் எடுத்துப்போவது தெரியாமலே அவாள்
தேடியந்த சோலையெங்கும் நாடியேபார்த்தார்

3 மந்தகாசமானவனத்தில் பன்னகசாலைகட்டி
மகாதவம்புரிந்து ஒருமகரிஷி இருந்தார்

4 அந்தக்காவலாளியர்கள் அனைவருங்கூடி
அவரைத்திருடரென்றுசொல்லி அவர்களும்நினைத்து

5 நேர்த்தியான சோலைவனத்திற் பூத்தமலர்களை
நித்யந்தோறும் திருடுகிறவன் நீயாடா என்றார்.

6 பார்க்குமந்த மாமுனிவரும் பயப்படாமலே
பதிலொன்று முறையாமலே மௌனமாயிருந்தார்.

7 வஞ்சத்திருடர்களும் பதிலுரைப்பாரோ
வாடாயெங்கள் ராஜாண்டை தன்னிலே என்றார்

8 அஞ்சாமலந்தமாமுனிவரும் அரசனிடம் வர
அரசன் கண்டுமிகபயந்து அவரடிபணிந்தார்

9 நந்தவனத்தில் மலரெடுப்பவன் நானில்லையென்று
ஞானதிஷ்டியாலதிற்றொருவார்த்தையுரைப்பார்

10 உந்தன்வனத்தில் மலர்களெடுக்கும் மாதர்களையெல்லாம்
ஒருக்ஷணத்தில் கண்பிடித்துத்தருகிறேனென்றார்

11 கும்பச்சுரையின் விரைகள்தன்னை கொண்டுபோய்நீங்கள்
கொந்தளப்பொன்னன சோலையில்போட்டுவையுமென்றார்

12 அன்புடனாந்தமாமுனிவரும் அனுக்கிறஹம் செய்து
அரசனிடத்தில் விடைகள் பெற்று ஆஸ்ரமம்சென்றார்

15-வது ?ட்டம்

(ராகம் சுந்தரேச இந்தவேளை என்றமெட்டு)

1 மனமகிழ்ந்து ருக்மாங்கதரிடம் முனிவருரைத்துச்செல்லவே
வனத்தைக்காக்கும்காவலர்களை, அழைத்துராஜன் சொல்லவே

2 அனேகம்கும்பசுரைகள்தன்னை, அந்தநந்தவனத்தில்
மனமகிழ்ந்து காவளர்களும், பாவினுள்ஒருக்ஷணத்திலே.

3 கும்பச்சுரைகளானதுகளும், கொடி தெரித்துப்படரவே
அன்புடன்வரும் தேவகன்னிகை, கால்தனில்பட்டிடரவே

4 ஆறுபேரும் மலரெடுத்து ஆகாசம்பரக்கவே
ஒருகன்னிகைமாத்திரம் இந்தச் சோலைவனத்திலிருக்கவே

5 தேடிவரும்காவலர்களும் தேவகன்னிகையைப்பார்க்கவே
ஓடியே அதிவேகமாய்வந்து, உரைக்கராஜன் கேட்கவே

6 உலகந்தன்னைச்செங்கோல்செலுத்தும் அரசனெழுந்து வருகவே
விலங்கிலிருக்கும்தேவகன்னிகையைப்பார்த்து மிகவுமறுகவே

7 வேகமாகவந்தராஜன் நின்றுமிகவும் கலங்கிடவே
ஓகோதெய்வப்பெண்ணின்றுவென்று உரைத்தாகின் புலம்பவே.

16-வது கட்டம்.

(பட்டாமணியகாரன் என்றமெட்டு)

பல்லவி

1 தேவகன்னிகையுரைத்தாள் ராஜனிடத்தில் தேவகன்னி
கையுரைத்தாள்

அநுபல்லவி

தேவேந்திரனுடையதாசிநாங்களென்று
பூவுலகந்தன்னையாளும் பூபதிருக்மாங்கதற்கு (தேவகன்)

2 தேசாதிதேசம்புகழும்ருக்மாங்கெதாராஜாதிராஜனிடத்தில்
வாசவனுடைய தாசி ஏழுபேர் நாங்கள்
வாசிக்கும் மலர்களை வந்து எடுப்போமென்று (தேவகன்)

3 தேவலோகத்திலிருந்து இந்தவனத்தைதேடியே மலரெடுப்
ஆவலுடனேயிந்த அரும்பை எடுக்கும்போது [போம்
பாவியான இக்கொடிகள்பட்டதே என்காலிலென்று(தேவ)

4 உந்தன் நகரத்திலுள்ளோர் ஏகாதேசி உபவாசம்செய்திரு
அந்தவிருதபலனை சந்தோஷத்துடன்கூட ந்தால்
எந்தனக்குத்தந்தீரானால் இந்திரலோகம் சேர்வேனென்று
(தேவகன்னி

17-வது கட்டம்

(கன்றிழந்த பசுவைப்போல என்றமெட்டு)

1 பூவுலகம் தன்னை யாளுகின்ற பூபதியுடனே யுரைத்தாளே
ஆவலுடனந்த அரசனப்போ அப்சரஸ்திரீயுடன் சொல்
லிவாரே

2 எந்தனுடைய பீம புரத்திலுள்ளோர் ஏகாதேசி என்பதை
அறிவாளோ
உந்தன் நகரிலோர் வண்ணாத்தி உபவாசம் தன்னைச்செய்
திருக்கா ளென்று

3 தேவகன்னிகை சொல்லும் வசனந்தன்னை செவிதன்னில்
கேட்டா ராசனப்பேட
சேவகர்கள் தன்னை அழைத்தரசன் சிந்தை மகிழ்ந்து சொ
ல்லுவாரே

4 இந்த நகரந்தன்னில் வசிப்போர்கள் ஏகாதேசி விருதம் எடு
த்திருந்தால்
அந்த விருதபலனை கொடுத்தாலே அனேக திரவியம் தரு
வேனென்றுரைத்து

5 தெருவுக்கு தெருவுக்கு தண்டோராவடித்து தெரிந்து வா
ங்க ளென்று ராசனுரைத்தார்
பறைகளடித்து அந்த சேவகர்கள் பட்டணத்து வீதியெங்
கும் சுற்றியேவந்தார்

18-வது கட்டம்

(ஆண்டிருப்பாய் ராஜியத்தை என்ற மெட்டு)

பல்லவி

1 பீமபுரபட்டணம் தன்னிலோர் வண்ணாத்தி
மாமியுடன் சண்டை செய்து மருமளிருந்தாள். (பீம)

2 யாவருக்கும் சேலை துவைக்கும் ஏழை வண்ணாத்தி
கோபமதிகமாயடைந்து சோறு புசிக்கவில்லை (பீம)

3 மேகவர்ணரான ஹரிமாதவர்க்குகந்த
ஏகாதசியன்று தினம் அன்னம் புசிக்கவில்லை (பீம)

4 பறையடிக்கும் சேவகர் தன்னை பார்த்தவள் மகிழ்ந்து
விரைவுடனே ஓடிவந்து உரைகள் செய்வாளே (பீம)

5 என்னுடைய மாமியாரோடு எதிர்த்து வாதாடி
அன்னம்புசிக்காமலே அடியேனிருந்தேனென்றால் (பீம)

5 ஏகாதசிதானோ அது ஏனோ நானறியேன்
ஏகாதசியானாலே பலனாகுமென்றாளே (பீம)

19- வதுகட்டம்

(நலுங்கிட நீர்வாருமையா சுந்திரகுமாரா என்றமெட்டு)

1 ஓடியேவந்து வண்ணாத்திமகிழ்ந்து உண்மையதனையுரைக்க
வாடி யென்றவளை வருந்தி யழைத்து வந்தார்களே சுருக்க

2 அன்புடனே வரும் அந்த வண்ணாத்தியை அரசனிடத்தில் காட்ட
இன்பமுடைய விருதம் இருந்ததும் மெய்யா என்னடி என்று கேட்டார்

3 அடியேனொருதினம் அன்னம் புசிக்கவில்லை அய்யா இது மெய்தான்
வடிவுள்ள கன்னிகைக்கு ஸ்வர்ணவிமானம் வந்தாலே ஏகாதசி தான்

4 நேசத்துடனணைத்து தண்ணீரை எடுத்துவிட பாசக்கொடிகள் விலக்க
தாசிமகிழ்ந்து ஏகாதசி மகிமைசொல்லி ஆகாசலோகம் பறக்க

5 அன்புமிகுந்த அரசன் அந்த வண்ணாத்திக்கு அனேகதிரவியங்கள் கொடுத்தார்
இன்பமுடைய விருதம் என்ன மகிமை யென்று ஏகாதசியை எடுத்தார்

6 யானை மீதில் தண்டோராவடித்து அனைவர்க்கும் தெரியச் சொன்னார்
ஜனாக்ஷகர்க்குகந்த விருதஞ்சொல்லி தேசங்கள் தோறும் சொன்னார்

20-வது கட்டம்

(ஆனந்தக்கோனாரே என்ற மெட்டு)

பல்லவி

தேசமெல்லாம் புகழ்ந்தார், ருக்மாங்கெதராஜாவிருதமிருந்தார்

அநுபல்லவி

1 ஆசாபாசமது தன்னையும் போக்கி, அன்பாய் விளங்கும் ஹரியின் மேலாக்கி
நேசமுடனேபகவானை நோக்கி, ஏகாதேசிஎன்று எங்கும் போக்கி (தேச)

2 அருண உதயந் தன்னிலெழுந்து, அன்புடனே ப்ராதஸ் நானங்கள் செய்து
கருணையுடனே தசமிதினத்தில் திருவாராதனம் செய்து ஒருவேளை புஜித்து (தேச)

3 ஏகாதசியன்று ஒன்றும் புஜியாமல், எல்லோருமாக பகவானைத்தேடி
பாகவதாள்கூடி கிதங்கள்பாடி, பரமானந்தக் கண்ணன் பாதம் கொண்டாடி (தேச)

4 பத்தினியாகிய சந்தியாவளியும், பாலன் தர்மாங்கத ராஜனுடன் கூடி

உத்தம புருஷர்க்குசந்த விருதம்தன்னை சிரத்தையுட
னே உபவாசம் செய்தார்கள் (தேச)

5 பானு உதயத்தில் ஸ்நானங்கள் செய்து, பக்தியுடனே தளி
கைகள் செய்து
தினரக்ஷகர்க்கு ஆராதனை செய்து துவாதசியன்றும் பார
ணை செய்தார்கள் (தேச)

21-வது கட்டம்

(மேடையில் வாகா வாருமென்ற மெட்டு)

1 பீமபுரத்தையாளும் அரசனும் பொகு பக்தியுடனே விரு
த மிருந்தார்
ஏமபுரம்தனை நாடாமலே எல்லோரும் ஹரிபாதம் பணிந்
தார்

2 நந்தகோவிந்தாவென்று பாடி எல்லோரும் நவநீத சோர
னைத்தேடி
முகுந்தா முராரே என்று கொண்டாடி முரளிகானலோல
ரை நாடி

3 சரணம் சரணமென்று ஸ்துதித்து எல்லோரும் சந்தோஷ
மாகக் கைகுவித்து
தரணியளந்தவரை நினைத்து எல்லோரும் தாமோதரா
என்று ஸ்மரித்தாள்

4 ஏமபுரத்தையாளும் அரசனும் பொகு இந்த வைபவத்தை
யுங் கண்டார்
நாமிருப்பதி லொருபயனுமில்லை யென்று ராஜிநாமா எழு
திக்கொண்டார்

22-வது கட்டம்

(சிறுவரே வாரும் வாரும் என்ற மெட்டு)

1 ஜிநாமா இந்தரரும் நமனுடைய அதிகாரம்
ராஜாதி ராஜர்களுக்கு அடுக்கோ இந்தப்பிரகாரம் (ராஜி)

2 தாசர்கள் போற்றிடுமந்த தாமோதரனைப் பணிந்தா
தேசங்கட் தோரும் புகழ்ந்து விஷேசபலனை யடைந்தார் (ராஜி)

3 சாகரத்தில் பள்ளிகொள்ளும் சியாமளவர்ணர்க்குகந்த
ஏகாதேசியைப்புரிந்த அனேக பலனை யடைந்தார் (ராஜி

4 எந்தனுடைய நகரில் இருப்பதில் பயனுமில்லை இந்திர
ரும் ராஜிநாமா எந்தனால் இனி யாகாது (ராஜி)

23-வதுகட்டம்

(ராஜாதி ராஜமகா என்ற மெட்டு)

1 சத்யலோகந்தன்னை யாளும் பிரம்ம தேவரும்
சித்தமிரங்கி எமனுடனே மெத்தவே யுரைப்பார்

2 அப்பா உந்தன் நகரந்தன்னை அரசாக்ஷி செய்வாய்
எப்பொழுதும் போலவே அதிகாரஞ் செலுத்துவாய்

3 இந்தவிதமாக பிரம்ம தேவரு முரைத்து
அந்த எமராஜர்க்கு விடை கொடுத்து அனுப்பினர்

4 சிஷ்டிக்கர்த்தாவான பிரம்மதேவரும் மகிழ்ந்து
சிருஷ்டி செய்தார் க்ஷணப்பொழுதிலே சிங்கார மோகி
னியை

5 காலிற் சிலம்பு பீலி கொலுசு கலகலனுமின்ன
நீலமணிகள் முத்துரசம் பவன்மாலைகள் பின்ன

6 கையில் வீணை தரித்துக்கொண்டு காந்தியாகவே
ஐயா எந்தனைப் படைத்த காரணம் அறியச்சொல்லு
மின்றால்

24-வது கட்டம்

(தங்கப்பாட்டு மெட்டு)

1 கண்ணே என் கண்மணியே பெண்ணே நான் சொல்லக்
கேளாய்
மண்ணுலகந் தன்னில் வாழும், ருக்மாங்கெதன் உன்னித
விருதம் புரிந்ததை

2 நேசமோடுரைத்திட விஸ்வாசமுடன் கேளாய் பெண்ணே
தாசாதியைப் பணியும் ருக்மாங்கெத ராஜன் செய்த மகி
மை தன்னை

3 கோகுலந்தன்னில் வளர்ந்த கோபிகா நாதர்க்குகந்த
ஏகாதசியைப் புரிந்து அந்த ராஜனால் எல்லோரும் ஹரி
பாதம் பணிந்தார்

4 பீமபுரம்தன்னில் வாழும் பூபதி விருதமிருக்க
எமதர்ம ராஜன்வந்து என்னிடம் இப்போது முறைகள்
செய்தான்

5 ஆலிலைமேல் பள்ளி கொள்ளும் ஹரியினோடு பக்தனான
சீலனிடம் தன்னில் சென்று எந்தன் மோகினி காலனுக்
குதவி செய்வாய்

25-வது கட்டம்.

(பூமலராம் பூவனத்தி லென்ற மெட்டு)

1 இந்தவிதமாக பிரம்மாதேவரும் உரைக்க
மந்தகாசமான அந்த மாதுவள் மகிழ்ந்து

2 இந்திரனையும் ஜெயிப்பேன் நான் சந்திரனையும் ஜெயிப்பேன்
எந்த ராஜா மன்னர் துரைகள் வந்தாலும் ஜெயிப்பேன்

3 எந்தனுடைய அய்யா எனைப்படைத்த மெய்யா
இந்த வேளை தன்னிலே விடை தந்தருளு மென்றாள்

4 மாயனைத் துகிக்கும் ராஜா மன்னரிடம் தன்னில்
போய் வருவாயென்று திருவாய் மலர்ந்தருள் செய்தார்

26-வது கட்டம்

(மாம்பழப் பாட்டு மெட்டு)

1 சந்தோஷமாகவே மோகினியும், சதுர்முக நாதனிடம் விடைகள் பெற்று
சுந்தரமானவனம் தன்னிலே, அன்னமயில் போல் மோகினியும்

2 சிந்தையில் ருக்மாங்கெதனை நினைந்து, சிவனை ஸ்மரணை செய்து செப்பிடலுற்றாள்
கதிரவன் உதித்த பிரகாசம் போலே, கையில் வீணை யெடுத்து கானம் செய்தாள்

3 மதுவனம் தன்னிலுள்ள பக்ஷி மிருகங்கள், பாது தொனி
யைக்கேட்டு மகிழ்ந்திடவே
பானுப்பிரகாசம் போல் விளங்குன்ற, பரமசிவனை நோக்
கிப் பாடுவாளே

27-வது கட்டம்.

[சாம்ப சதாசிவமே என்ற மெட்டு]

பல்லவி

சம்போ கங்காதரனே சதாசிவ சம்போ கங்காதரனே

அநுபல்லவி

1 சம்போ கங்காதர சங்கரி மனோஹரா
தும்பிமுகனைப் பெற்ற சதாசிவ (சம்போ)

2 பஞ்சமுக முடைய பரமசிவனே எந்தன்
நெஞ்சில் உறுதி செய்தேன் சதாசிவ (சம்போ)

3 வீராதி வீரரான சூரர்களை வதைத்த
ஆறுமுகனைப் பெற்ற சதாசிவ (சம்போ)

4 காளகோட விஷத்தை வாயினாலேந்திக்கொண்ட
நீலகண்டப் பிரபுவே சதாசிவ (சம்போ)

28-வது கட்டம்

(தெருக்குத் தெருக்கள் எங்குந் தேடிய என்ற மெட்டு)

I மாமயிலது குயில்கள் கூவவே, மந்திரகிரி தன்னில் மாது
வள் வந்து கானம் செய்பவே

பீமபுரத்து ராஜனு மொருநாள் வைபோகமாக, புறப்பட்
டாரந்த வனத்தை நாடியே

2 பாலகா நான் போய் வருகிறேன் வனத்திலுள்ள, பக்ஷி
மிருகங்களை வேட்டையாடவே
சீலமுடனே சிம்மாசனம் தன்னில் வீற்றிருந்து, செங்
கோல் முறையைப் பார்த்து வருகுவாய்

3 சேனை படைகளெல்லாம் கூட்டியே, கரத்தில் நல்ல ஜமு
தாடும் பிடிக்கத்திகள் தீட்டியே
கானகம் தன்னில் அரசன் வருகவே துஷ்ட மிருகங்கள்
காடி புலியை அடித்துத் துரத்தவே

4 மந்தரகிரியின் சார்பிலே வரவே அதிரசமான மாதுவ
ளூட தொனியைக் கேட்கவே
இந்த வனத்தில் ஏதோ கானமென்று ராஜாதி ராஜன் இன்
பமாய் அவள்அருகிலே வரவே

29-வது கட்டம்

(அனுதினமும் என்ற மெட்டு)

பல்லவி

1 கானம் செய்யும் மோகனங்கியே கண்டாரே பீமபுரத்தா
சன்

அநுபல்லவி

பானுப்ரகாசம் போல் விளங்கும் அந்த பரமசிவனுடைய
பாதம் பணிந்து (கானம்)

2 வீணை தன்னைக் கையிலெடுத்து திவ்ய, வெண் குயில் போ
லவே சப்தமிட்டு
கானமதுதனை யுரைத்து சிவன் கமலப் பொற்பாத மல
ரைக் குறித்து (கானம்)

3 மந்திரகிரி தனிலுதித்து அந்த மகாதேவருடைய பாதம்
ஸ்துதித்து
சந்திரபிம்பம் போல் ஜொலித்து பொகு, சந்தோஷ சாக
ரம் தன்னில் குதித்து (கானம்)

4 கன்னிகையாள் மின்னலொளியை இருகண்ணதினல் பலர்
க்ககூடவில்லே
மன்னருக்மாங்கெதன் மகிழ்ந்து அந்த, மாதுவளுடனே
சேதியுரைப்பாரே (கானம்)

30-வது கட்டம்

(மானே மரகதமே என்ற மெட்டு)

1 அடி கண்ணே கமலப்பூவே பொன்னே என் பூமணியே
வாடி
இந்தக் கானகம்தனிலே வந்து கானம் செய்வதும் எனடி (அடி)

2 என்னோடு இசைய நல்ல மன்னன் அமைத்தருளு மென்று
நான் இந்த வனந்தனிலே வந்து கான முரைத்தேன்
இன்று

3 அடி உன்னிதமான கொடி மின்னல் ஒளிபோலே உன்
திரேகம்
அடி உந்தன் மீதிலே பொகு எந்தனுக்கு அதிக தாகம்
(அடி)

4 யாரடா நீ எந்த ஊரடா இப்படி உரைத்தாய்
பொகு அன்பு மிகுந்தவன் போல் இன்பமோடெந்தனை
அழைத்தாய் (அடி)

5 அடி நாரணரைப்பணியும் தீரன் ருக்மாங்கெதன் நானே
அடி நாடி யுந்தனைத் தேடி ஓடிவந்தேனடி நானே (அடி)

31-வது கட்டம்

(குறவஞ்சி ராகம்)

1 வாராய் என் கண்மணியே மரகதமே குயிலே
யாருடைய புத்ரியோ நீ அதை யுரைப்பா யென்று

2 மன்னவருரைத்திடவே மாதுவள் மகிழ்ந்து
உன்னிதமாய் தானுரைப்பாள் ருக்மாங்கெத னுடனே

3 சத்திய லோகத்தில் வாழும் சரஸ்வதி மணவாளன்
பெற்றெடுத்த புத்ரி யெந்தன் பேரு மோகனாங்கி

4 பூமியில்வாழ் அரசரை மணம் புரியவந்தேனென்றாள்
வீமபுரத்தரசனும் பொகு பிரம்மானந்தமாக

5 தேனே இளங்குயிலே உன்னைத்தேடி வந்தேனென்றாள்
கானகத்தில் வந்தொருவரை கனிவுடனேகூட

6 கைப்பிடிக்கலாமோவென்று கன்னிகையாள் சொல்ல
மைகுழலாளுடனே அந்த மன்னவரேதுரைப்பார்

32-வது கட்டம்

(உன்னையே நம்பினேன் என்ற மெட்டு)

பல்லவி

1 மோடி செய்யாமலே வாடி மோகனுங்கி

அநுபல்லவி

காடியே உந்தனை தேடியே வந்தேனடி. (மோடி)

2 கல்லா உன் மனது காதினிலுரைத்ததோர்
சொல்லாகிலும் கேட்கவில்லையோடி என் கண்ணே (மோ)

3 பஞ்சைபோல் வந்து நின்று கெஞ்சி யழைத்திட
கொஞ்சமாகிலு முன் நெஞ்ச மிறங்காதோடி (மோடி)

4 மெத்த அன்போடழைத்து உத்தமருரைத்திட
சித்தமகிழ்ந்தவள் சேதி உரைக்கத் துணிந்தாள் (மோடி)

33-வது கட்டம்

(ஏமிசேது நமா கிஷ்ண என்ற மெட்டு)

1 உந்தனுடைய நகர்க்கு இப்போ வருந்தினீராகில்
எந்தனுக்கோர் வாந்தனை தந்திடவேணும்,

2 வாங்கொடுக்க வேணுமென்று வஞ்சியர்கேட்க
தருகிறேனென்றரசன் மகிழ்ந்து உறுதியாயுரைத்து

3 கன்னியுடன் கந்தர்வ விவாகம் செய்துமே
மன்னவனும் ரதத்தின் மீதிலேறிவருகவே

4 தந்தை வருகும் சேதிபறிந்த தர்மாங்கதனப்போ
சந்தோஷத்துடன் கூடஎதிர் வந்து வணங்கவே

34-வது கட்டம்

[ஐயா முருகேசா என்ற மெட்டு]

பல்லவி

1 வந்தாரே மகாராஜன் மகிழ்ந்தாரே ஹரிதாசன்

அநுபல்லவி

அந்த முள்ள நகரத்துக்கு சந்தோஷத்துடனரசன்
மந்தகாசமானதொரு மாதுவளை அழைத்துக்கொண்டு (வ)

2 சந்தோஷமாய் பாலகனும் சந்தியாவளி முதல்வர்களும்
வந்து எதிராகநின்று வணங்கியவர் அடிபணிந்தான் (வந்)

3 அந்தணர்கள் மனமகிழ்ந்து வந்து எங்கும் நிறைந்திருக்க
அந்தமான நகரம் தன்னை அலங்கிருதங்கள் செய்தாரப்
போ (வந்தாரே)

4 பந்துக்கள் நிறைந்திருக்க பலவித வாத்யம் முழங்க
மந்தகாச மோகினியுடன் மகிழ்ந்திருந்தாராசனப்போ (வ)

35–வது கட்டம்.

(நோட்டு ராகம்)

1 கன்னிகைதனை மணம்புரிய கனக சபையோர் மகிழவே
உன்னிதமாய் போஜனங்கள் உண்டு மிகவும் புகழவே

2 மன்னவருடன் உரைப்பளே யந்த மசாஜாலக்காரியும்
என்னுடன் நீர் மனமகிழ்ந்து இந்த இடத்தில் வசித்திட

3 ஒப்புடன் மனம் சகித்திருக்குமோ உந்தன் தேவி சுதனுக்குமென்று
செப்பினதோர் வசனந்தன்னை செவியாலரசன் கேட்கவே

4 தன்னுடைய பாலனை தர்மாங்கதனை அழைத்துமே
மன்னவரும் மனமகிழ்ந்து மகனுடனே சொல்லுவார்

5 நகரத்திலரசாண்டிருந்து நாமமெடுத்த விருதம் தன்னை
புகழ எங்கும் பறையடித்து புண்ய விருதத்தை செய்குவாய்

6 பக்தியுடனே விருதமிருந்து பட்டணத்திலரசாளுவாய்
சித்தமையுடன் சோலைவனத்தில் சென்று வசிக்கிறேனென்று

7 மெத்த அரசன் பாலனுடைய மேனி தழுவிச் சொல்லியே
சித்தமகிழ்ந்து மோகினியுடன்சிங்காரவனத்திற்செல்லவே

36-வது கட்டம்.

(மாதவனே ஹரியே என்ற மெட்டு)

பல்லவி

1 சிங்கார வனத்தில் வந்தார் வடிவுற்ற மங்கையுடனிருந்தார்

அநுபல்லவி

சிங்கார மோகினிப் பெண்ணுடன்கூடி அலங்கிருத்மாயிருந்தார்
திருசங்கு தரித்திடும் சாரங்கேசனுடை பாதம் தன்னை மறந்தார் (சிங்கா)

2 மாணிக்க வைடூர்யத்தா லிழைதததோர் மண்டபத்தை நாடினர்

திவ்ய ஆணிப்பொன் முத்ததினுலிசைந்த தூங்குமஞ்சம் தன்னில் ஆடினர் (சிங்காரம்)

3 சந்தனம் புனுகு ஜவ்வாதுடன் கலவைப்பன்னீர்தனையும் தரித்தார்

பொகு மந்தகாசமான மாதுவருடனே கூடி மனம்பூரித்தார் (சிங்கார)

4 ஹரிதினமாகிய தசமியன்ருெரு பாக்கை அரசன் கையில் கொடுத்தாள்

அங்கே அரசாளும் சிறுபாலன் ஹரிதினமென்றும் விளங்கப் பறையடித்தான் (சிங்கார)

5 மோகினி காமதனுலே கொடுத்திடும் பாக்கை முகலில் துப்பினுர்

அதுவேகத்துடன் தூங்குமஞ்சம் விட்டிறங்கி ஹரி ஹரி யென்றுமே செப்பினுர் (சிங்கார)

37-வது சட்டம்.

(மாயாவதாரனுன என்ற மெட்டு)

1 எப்பொழுதும்போல் கொடுத்த எந்தன் கைப்பாக்கை

துப்பிவிட்டெழுந்திருந்து தூரநின்றதென்னு

2 எந்தனுடைய நாதனே இது எவர்கள் போதனை

இந்தவேளையில் துவேஷம் வந்ததைச்சொல்லும் நாதனே

3 போதனைகளொன்றுமில்லை பெண்மணே நீ கேளாய்

மாதவர்க்குகந்த விருதம் இது முதல் நாளாய்

4 தசமி ஏகாதேசி யென்றும் துவாதேசி யென்றும்
தசமுகனை சம்ஹரித்த தேவர்க்குகந்த நாள்

38-வது கட்டம்.

(போகாதே பெண்மயிலே என்ற மெட்டு)

1 இந்த உபவாசம் செய்ய எந்தனாலாமோ
எந்தனிடம் இந்தவிதம் உரைக்க ஞாயமோ

2 அரசர்கட்கு அடுக்கோ இந்த ஹரிதினவிருதம்
தருகிறேனென்ற வார்த்தைத்தாரும் இத்தருணம் தன்னிலே

3 எந்தவரம் வேண்டுமோ அதைத்தாரேனென் றுரைத்தார்
விந்தைபுரிந்த நாதர்க்குகந்த விருதத்தைத்தாருமென்றாள்

4 சாகரத்தில் பள்ளிகொள்ளும் சாரங்கேசர்க்குகந்த
ஏகாதேசி பலனைக் கொடுக்க என்னாலாகாதென்றார்

39-வது கட்டம்.

(நின்றதொரு பாலகனே என்ற மெட்டு)

1 கேட்டவரந் தாரேனென்று எந்தனைகாட்டிலிருந்தழைத்து வந்து இப்போ

மாட்டேனென்றுரைத்திடவே உம்மைப்போல் மன்னவர்க்குத் தானடுக்கோ

2 மன்னவர்க்கடுக்கோ என்று அந்த ஒரு மாதுவளுரைத்திடவே
இன்னம் வேறு வரம் எதுவோ அந்த வரம் இந்த க்ஷணம் தாரேனென்றார்

3 அருமையுடன் பெற்றெடுத்த உந்தனுட அன்புடைய பாலகனார்
சிரசமதுகரத்தால் எந்தனுக்கு சீக்கிரத்தில் தாருமென்றார்

4 உத்தண்டங்களாக அந்த மோகினி ருக்மாங்கெதரிடம் உரைக்க
சித்தம் நொந்து அரண்மனைக்கே வந்தரசன் ஸ்ரீஹரியை நினைத்து நின்றார்

5 நின்றவொரு மன்னவரை சந்தியாவளி கண்டுமொரு வார்த்தை சொல்வாள்
நீர் நொந்து மிகவாடி யிருக்கக் காரணத்தை எந்தனுக்கு உரையுமென்றார்

40-வது கட்டம்

(தெம்மாங்கு மெட்டு)

1 மன்னவரெதிரே வந்து அந்த மங்கையரும் கேட்டிருக்க
கண்ணில் ஜலம் பெருகிவரவே ராஜன் காதலிக்கு எது சொல்வார்.

கன்னிகை மோகினியவள் சொன்னதோர் வசனம் தன்னை
என்னென்று உறைகள்செய்து எந்தன் மனது சகிப்பேன்.

பன்னகசயனர்க்குகந்த விருதம் தன்னை மோகினி கேட்கிறாளே,
என்ன நான் செய்வேனிப்போ.

2 விந்தைபுரிந்தோர்க்குகந்த விருதந்தனைத்தவிர எதுவும்
தந்திடும் என் நாதாஎன்று சந்தியாவளி வணங்கிநின்றாள்.

அந்தரங்கம் தனிலுருகி ஆயாசம் மெத்த அடைந்து மந்தகா
சரை நினைந்து மன்னவரும் ஏதுசொல்வார்.

எந்த வரம் என்றவட்கு தந்து மனது சகிப்பேன் என்ன நான்
செய்வேனிப்போ

3 பத்தினி சந்தியாவளியும் டர்த்தாவின் எதிரே நிற்க
உத்தம குணங்கள் பெற்ற ருக்மாங்கெதனும் ஏது சொல்
வார்

சித்தத்தில் மிகவும் நொந்து ஸ்ரீகோவிந்தரை நினைந்து, பத்தினி
யுடனே அந்த பகவத் தொண்டரேது சொல்வார்

உத்தம புருஷனுகிய நம்மிட புத்திரனைத் தலை கேட்கிருளே
என்ன நான் செய்வேனிப்போ

4 மன்னவருரைத்திடவே அந்த மங்கையின் மனம் தளர்ந்து
தன்னுடைய பாலனன தர்மாங்கதனை அழைத்துவந்தாள்

அன்னையும் பிதாவும் வாடி ஆயாசவேர்களோட உன்னித பா
லன் அறிந்து ஓடிவந்தெதிரே நிற்க

தன்னேடு பாலன் தர்மாங்கதனை தழுவியணைத்துக்கட்டிக் கொ
ண்டு என்ன நான் செய்வேனிப்போ

41-வது கட்டம்.

(பண்டாரக்கிழவன் பாட்டு மெட்டு)

1 என்ன செய்வேன் பாலா இப்போ ஏது செய்வேனென்று
மன்னவரும் புலம்பி மெத்த மகனேடு எதுரைப்பார்

2 பாவியிந்த மோகினியால் படுந்துயரம் கேளாய்
ஆவிதளர்ந்தோடிவந்தேன் அருமையுள்ள சேலா

3 உரக சயனருக்கு உகந்த விரதம் தன்னை
வாமதுவாய்க் கேட்டு இப்போ வாது செய்தாளென்னை

4 வாது செய்தாளென்று உமே பாலகனே துரைப்பான்
மாதவாக்கு உகந்த விரதம் தவிர எதுவும் கேட்டால்

5 தந்திடும் என் ஐயா என்று தர்மாங்கதனுரைக்க
தந்தையும் மனதில் மிக நொந்து வருரைப்பார்

6 என்றவாம் என்றவளுக்கு தந்து மணம் சகிப்பேன்
உந்தன் சிரசைக் கேட்டு இப்போ உருகச் செய்தாள்

42-வது கட்டம்.

(அன்னையர் அடிபணிந்து என்ற மெட்டு)

1 தந்தையருரைத்திடவே தர்மாங்கத ராஜனப்போ சிந்தை
மகிழ்ந்தேதுரைப்பான்

எந்தனுடைய சிரசு இந்த க்ஷணம் நான் தருவேன் ஏகா
தேசியை விடுவாரோ

அந்த ஒரு மோகினியாலே கெடுவாரோ
2 அந்தவனத்திலிருக்கும் அனையான மோகினியை இந்த
க்ஷணம் அழைத்து வாரேன்

எந்தன் மீதில் தாகம் தன்னைச் சிந்தையில் நினையாமலே
நந்த முகுந்தரை பஜியுங்கோ

சிந்தை புரிந்த விரதத்தை பஜியுங்கோ

3 பாலகன் மெத்த உரைத்து பரமானந்தமான ஹரிலீலவர்ண
ரை நினைத்து

சோலைவனம் தன்னில வந்து ஜொலிக்கும் மோகனுக்கு
பர்க்கு பாலகன் மிகவும் பணிந்தான்
அவள் பொகு ஜாலங்களுரைக்கத் துணிந்தாள்

4 எப்போதும் போலிருக்கையில் ஏகாதேசியென்றுரைத்து
இப்போது எந்தனை இம்சித்தார்
அப்படிக்கு ஆகேனென்று அவருடன் உரைத்ததற்கு
அப்பா உந்தன் தலைபைத் தாராராம்
அந்த ஒரு அல்ப விரதம் புரியப்போராராம்

5 மெத்தவும்ஜாலந்துடனே மோகினியுரைத்திடவே உத்தம
பாலகனரிந்து
எத்தனை உரைத்தாலும் இனி ஏகாதேசி விடுவதில்லை இந்
தருணம தனில் வருவாய்
என் சிரசு கொடுத்திடவே நீயும் பெறுவாய்

43-வது சட்டம்.

(பொங்கு திருப்பால் கடலில் என்ற மெட்டு)

1 பாலகன் இவ்வாறு சொல்லிப் பட்டணம் தேடி வருகவே
ஜாலம் புரிந்த மோகினி வெகு ஜல்தியுடனே கூடவே

2 சோலைவனம் தன்னைவிட்டு சுருக்குடன் எழுந்திருக்கவே
பாலன் வருகும் வழியைக் கண்ணால் பார்த்து மோகினி
வருகவே

3 கூடிருக்கும் சபைதன்னிலே கோடி சூர்யகாந்திபோல்
நாடியந்த மன்னர் சபையில் நடுவிலே வந்து நிற்பளே

4 சூரத்தன்மையான பாலன் சுருக்கவந்து நிற்கவே
வீரமண்டி போட்டு மோகினி விரித்து மூர்த்தியை எக்கவே

5 கிட்ட வந்து சந்திரியாவளியும் தொட்டு பாலன் முகம் தனை
மட்டில்லாத விசனமுற்று மன்னவனைப்பார்க்கவே

6 அரசன் மெத்த மனம் தளர்ந்து ஹரியை நோககி ஸ்துதிப்பரே
நரசிம்மாவதாரமெடுத்த நாராயணரை ஸ்மரிப்பரே.

44-வது கட்டம்

(ஆயுதே மதி என்ற மெட்டு

1 மாதவா ஹரியே இப்போது நீர் கெதியே
ஆதரவுடன் காத்து ரக்ஷித்து அருளும் ஸ்ரீ ஹரியே

2 பாதகி இந்த மோகினியால் வந்த
தோதகதுன்ப துயரதனைத் தீர்த்து ரக்ஷியுமே

3 அண்டமுழுவதும் உண்ட சிலனே
தொண்டர்களுக்கருள் புரிந்து நின்ற கோபாலனே

4 இந்த மோகினியால வந்த துயரத்தை
இந்த வேளையில் தீர்த்து ரக்ஷியும் நந்த கோபாலனே

5 ஆனைதன்னைக் காத்த தீனதயாளனே
கோனர்களுடன் கூடியே கோலெடுத்து மேய்த்தோனே

45-வது கட்டம்

(தேடியே மதுரைக்கு என்ற மெட்டு)

1 மெத்த ஹரி பாதத்தை சித்தம் தனில் நினைத்து
உத்தம பாலன் மீதில் கத்தி எடுத்து ஓங்க

2 வேசத்துடனே வாளும் ஆகாசமாய்ச் சுழண்டு
மோகனமாலையாக விழக மோகினிகண்டாள்

3 இந்திரஜாலமோ இது மந்திர மாயமோ இப்போ
எந்தனுக்காகச் செய்த தந்திர ஜாலமோ என்றாள்

4 மாலையதனைக்கண்டு ஜாலமென்றுரைத்திட
நீலவர்ண துரையை நினைத்து சத்தியம் சொல்வார்

5 இந்திராதி தேவர் சாக்ஷி சந்திராதி மூவர் சாக்ஷி
விந்தை புரிந்திடும் கோவிந்தனை சாக்ஷி என்று

46-வது சட்டம்

(கப்பல் ராகம்)

1 உறுதியுடன் மோகினிக்கு சத்தியங்கள் சொன்னார்
மறுபடியும் வாளெடுத்து ஓங்கியவா நின்றார்

2 அரசனப்போ வாளெடுக்க அச்சுதனும் கண்டு
கருடராஜன் புஜத்தில எழுந்தருளிக்கொண்டு

3 சாகரத்தில் பள்ளிகொள்ளும சங்குசக்ரதாரி
வேகமுடன் வாளெடுக்கும் அரசனைக்கோரி

4 வருகிறார் வைபோக வைகுண்டவாசன்
பரிபூரண பக்தர்கள் அனைவர்க்கும நேசன்

5 வீசி நின்ற வாளை கையில் பிடுங்கிக்கொண்டார்
நேசமுடன் ராஜருக்கு எதிரே வந்து நின்றார்

6 பக்தியுள்ள ராஜனும் பகவானைக்கண்டு
பெத்தவும் மனமகிழ்ந்து கொண்டாடிக்கொண்டு

7 செங்கரங்களிரண்டையும் சிரசின் மேல் குவித்தார்
செங்கமல நாதருட திருவடியை ஸ்துதித்தார்

8 தும்புரு நாரதர் கீதங்கள் பாட
கிம்புருஷ கின்னரான் தாளமது போட

9 தூப தீபாராதனைகள் மிக செய்தார்
தேவலோகத்தரசன் புஷ்ப மழை பெய்தார்

10 சக்ராயுதம் தரித்த சாரங்கேசர் மகிழ்ந்தார்
ருக்மாங்கதருடைய பக்தியைப் புகழ்ந்தார்

47-வது கட்டம்.

(தந்தினத் தானனே என்ற மெட்டு)

1 பக்த தபாபரரை அனைவரும் பணிந்து போற்றி நிற்க
மெத்தவும் மோகினிக்கு பகவானும் புத்திமதியுரைப்பார்

2 பக்திதனில்ச் சிறந்த இந்த விரத பலனறியாமலே
பெண் புத்தியினாலின்று நீ இத்தனை தூரம் செய்தாய்

3 மாதவனும் உரைக்க மோசனுங்கி மனதில் மிக நொந்து
பாதகியாகி விட்டோமென்றெண்ணியே எதுவை செய்வா ளப்போ

4 இந்தப்பலன் தரவே பிரம்மதேவர் இவ்விடம் போகச் சொன்னார்
நான் வந்த வகையறிந்து எனக்கொரு வழி சொல்ல வேணுமென்றாள்

5 ஏகாதேசியைப் புரிந்தோர் துவாதேசி பகலில் நித்திரை செய்தால்

மோகினிக் கிரட்டிலோர் பங்காகவே பாகம் பிரித்து விட்டார்

6 சாகரந்தன்னிற் பள்ளிகொண்டதோர் சாரங்கேசன் அருளால்

மோகினி தேவி யப்போது அந்தரத் தியானமாக மறைந்தாள்

48-வது கட்டம்.

(வந்தனமது தந்திட என்ற மெட்டு

பல்லவி.

1 சகலவர்களும் மகிழவே சாரங்கேசனைப் புகழவே

அநுபல்லவி

மகா சீலன் தர்மாங்கதனுக்கு மகுடாபிஷேகம் சூட்டவே

2 மேளவாத்தியம் முழங்கவே மிகு ஜனங்களும் நெருங்கவே

சூழநிற்கும் சுமங்கிலிமார் சோபனங்கள் பாடவே (சகல)

3 வேதவேதியர் கூடியே வேதங்கள் மிக ஓதியே

கோதாவரி, கங்காதீர்த்தம் கொண்டுவந்தபிஷேகம் செய்ய

4 அண்டர்கள் மலர் தூவவே ஆனந்தக்களிப்பாகவே

தண்டுளபமாலை யணியும் தாமோதரனைப்பணிந்து போற்றி

5 நேசமுடனே ராஜனுக்கு ஆசீர்வாதம் சொல்லியே

வாசுதேவன் மனமகிழ்ந்து வைகுண்ட நகர் செல்லவே ச)

49-வது கட்டம்

(எல்லோரும் நாமனெல்லோரும் என்ற மெட்டு)

1 மங்களம் செயமங்களம் மாதவர்க்கு மங்களம்
சங்கு சக்ரம் தரித்தவர்க்கு சர்க்குண பரிபூர்ணருக்கு
எங்கும் நிறைந்து விளங்கும் ஏகவஸ்து வானவர்க்கு (மங்க
ளம்)

2 அண்டமெல்லாம் அளந்தவர்க்கு அகண்டபரி பூர்ணருக்கு
தொண்டர்களைக்காத்தவர்க்கு. ஸ்வயம்பிரகாசருக்கு (மங்
களம்)

3 யானைதன்னைக்காத்தவர்க்கு அன்பர்க்கனுகூலருக்கு
தீனபரிபாலருக்கு திவ்யஸொரூபருக்கு (மங்களம்)
4 மாதவனென்றழைத்திடும் ருக்மாங்கெதனைக்காத்தவர்க்கு
சீதாபிராட்டி சேசாசி க்ஷீராப்திதன்னில் வாசருக்கு
(மங்களம்)

ருக்மாங்கெத சரித்திரம் முற்றிற்று.

அஷ்டலெக்ஷிமி விலாஸ் பிரஸ்,

மதுரை.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

வேதாந்த பிரமானந்தக் கீர்த்தனை

இஃது வேதாந்த சாரங்களை பலராகங்களிலும் பாடி வேதாந்த சம்மந்தமான விஷயங்களை பற்றியும் குரு பக்தியைப் பற்றியும் அனேக ராகங்களில் பாட்டுகள் பாடியிருக்கிறது இதில் கண்ணிகள், ஆண்டிப்பாட்டு அன்னைமின்னே வேதாந்த பாட்டுகளும் இன்னும் மற்ற விஷயங்களும் அடங்கியிருக்கிறது. விலை ரூ 1—0—0

அஷ்டோத்திர சதநாமங்கள் விநாயகர் சிவம், சுப்பிரமணியர், விஷ்ணு இவைகள் அடங்கியது.

விலை அணா 0—2—0

புதிய ஜோதிட நூல்

உடுத சாபிர தீபிகை தமிழ் உரையுடன் விலை 0—12—0

ஸீமேஷ்வாஉள்ளமுடையான் இரண்டாம்பாகம் 1—0—0

K. காசிவிஸ்வநாத பிள்ளை

புக்ஷாப் புதுமண்டபம்

மதுரை